DEPOSITION OF WITNESS

IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR), TIRUCHIRAPPALLI.

**O.S No.185/2023**

**P.W. 3**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.அருண் |
| Father's Name | : | திரு.கண்ணப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of February 2025.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி சாட்சி ஆவேன். நீதிமன்ற அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியம்அளிக்க வந்து இருக்கிறேன். நான் கனரா வங்கி, உறுமு தனலெட்சுமி கல்லூரி கிளையில் கிளை மேலாளராக பணியில் இருக்கிறேன். நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ரெபேக்காள் கணவர் பெயர் தாவிது ராஜ் , தகப்பனார் பெயர் ராயர் கதவு எண்.3/808 வினோபாஜீ தெரு, அண்ணா நகர் ,பாப்பா குறிச்சி,காட்டுர் , திருச்சி என்ற நபர் பெயரில் எங்கள் வங்கியில் எந்த கணக்கும் இல்லை. மேற்படி நபருக்கு எங்கள் வங்கியில் கணக்கு இல்லை என்பதற்கு நான் வழங்கிய கடிதம் சாட்சி தரப்புசான்றாவணம் 1 ஆகும். அந்த நபரின் வங்கி கணக்கை பார்த்தால் கூற இயலும். எங்கள் வங்கியின் கிளை எண்.2755 ஆகும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ல் 10.1.2022 அன்று எங்கள் வங்கி கிளை எண்.2755 குறிப்பிட்டு எங்கள் வங்கி கிளை வாயிலாக ரூபாய் 10,000/–

செலுத்தப்பட்டு இருக்கிறது. அது அந்த நபர் கணக்கில் எங்கள் வங்கியில் வந்து பணம் செலுத்தியிருக்கிறார்கள். பணம் செலுத்துவதற்கு அந்த நபருக்குவங்கி கிளையில் கணக்கு இருக்க வேண்டிய அவசியம் கிடையாது. வா.சா.ஆ.4 ல் எங்கள் வங்கியின் கிளை எண்.2755 குறிப்பிட்டு செலுத்தப்பட்டுள்ள அனைத்து தொகைகளும் அவ்வாறே செலுத்தப்பட்டிருக்கிறது.

**குறுக்கு விசாரணை**

பிரதிவாதி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லை. உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை *17* விதி *2*-ன் கீழ் *3* மற்றும் *10* பிரதிவாதி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதில் இருந்து விலக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Approved